Registered as a Newspaper

தொழிற்பயிற்சி நெறிகள்
உடன் ஆரம்பமாகின்றன.
Radio, T. V. Deck
Electrical Wiring
Air-condstion &
Refrigeration
Motor Mechanism
Motor Winding
வகுப்புகள்
NORTH CEYLON
TECHNICAL INSTITUTE
14, St. Peter's Lane,
JAFFNA

# உதயன்

விலை: ரூ. 1-25

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

London Exam
Nov. Dec. 1982
C. I.M.A. — Stage I&II
A.A.T. Prelim &Inter.
I. D. P. M. Part I
10-7-87 முதல்
ஆரம்பமாகிவிட்டன
தகுதியான பிரபல
விரிவுரையாளர்களால்
வகுப்புகள் நடாத்தப்படு
கின்றன.
NORTH CEYLON
TECHNICAL INSTITUTE
14 St. Peter's Lane
JAFFNA.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆனி 30 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 துல்ஹஜ் பிறை 17 (14 – 07 – 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 106

## இந்தியாவில் இருந்து செல்லவில்லை

ஒட்டாவா, ஜூலை 13
கனடாவில் ஞாயிறு தஞ்சமடைந்த 174இலங்கைத் தமிழ் அகதிகளும் இந்தியாவில் இருந்து செல்லவில்லை.

மேற்குஜெர்மனி அல்லது நெதர்லாந்து நாட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கனடா சென்ற 174 தமிழ் அகதிகளும் ஆயுதப் படைத் தளத்தில் தடுத்துவைப்பு!

ஒட்டாவா, ஜூலை 14
படகில் சென்று கனடாவில் தஞ்சம் புகுந்த 174 இலங்கைத் தமிழ் அகதிகளும் கனேடிய ஆயுதப்படைத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர்.

இப்படி பி. பி. சி வானொலி நேற்று அறிவித்தது

174 அகதிகளில் ஒருவர் பெண், ஏனையோர் ஆண்கள்.

இந்த அகதிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை அத்திலாந்திக் கடலை படகு ஒன்றில் கடந்து கனடாவின் நோவாஸ்கோட்டியா பகுதியைச் சென்றடைந்தனர்.

இதனிடையில் படகின் கப்டன் உட்பட இரண்டு பேரை விசாரணைக்காக கனேடியப் பொலிஸார் கைது செய்து உள்ளனர்.

இந்த தமிழ் அகதிகள் இந்தியாவில் இருந்து கனடா சென்றவர்கள் என்று பி. பி சி. நேற்று அறிவித்தது. (இ-எ)

## ஆனையிறவில் மோதல்!

யாழ்ப்பாணம், ஜூலை 14
ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து நூற்றுக் கணக்கான பஸ் பயணிகளைப் பணயம் வைத்து வெளியேற முயன்ற இராணுவத்தினர் போராளிகளின் தாக்குதலினால் முகாமுக்குத் திரும்பிச் சென்றனர்.

சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:-

நேற்றுக்காலை அறு மணி அளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியூர் நோக்கிச் சென்று கொண்டிருந்த பல பஸ்களையும் பயணிகளையும் இராணுவத்தினர் தடுத்து வைத்தனர்.

இதேவேளை இரண்டு பொம்மர் விமானங்களும், ஹெலிக்கொப்டர்களும் ஆனையிறவு முகாமைச் சுற்றி பறந்து கொண்டிருந்தன.

முகாமில் இருந்த நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் பஸ் பயணிகளையும் அழைத்துக் கொண்டு கடற்கரை ஓரமாகவும், காட்டுப் பாதையூடாகவும் இயக்கச்சிப் பகுதியை நோக்கி முன்னேற முயற்சித்தனர்.

சிலயார் தூரம் முன்னேறி வந்த படையினரைக் கண்ட போராளிகள் அவர்கள் மீது கடும் தாக்குதல் நடத்தினர்.

படையினரும் பதில் தாக்குதல் நடத்தினர்.

விமானங்கள் எதுவும் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபடவில்லை.

பின்பு படையினர் முகாமுக்குத் திரும்பிச் சென்றனர். (இ-10)

## முச்சந்தி முரளி



ஓம், ஓய்! வாற வெளிநாட்டுக்காரர் எல்லாம் ஆஸ்பத்திரியைப் பாக்கிறது தங்களுக்கு வெட்கக்கேடு எண்டு நினைச்சும் சேதமான வார்ட்டுகளை திருத்தச் சொல்லலாம் தானே...!

### யாழ். ஆஸ்பத்திரியில்

# ஷெல் தாக்கி சேதமுற்ற வார்ட்டுகள் திருத்தப்படும்

## மூடுவதென்ற யோசனை கைவிடப்பட்டு விட்டதா?

- உதயன் செய்தியாளர்; எம். பேரின்பநாயகம் -

யாழ்ப்பாணம், ஜூலை 14

**யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில், ஷெல் தாக்குதலினால் சேதமடைந்த வார்ட்டுகளும், ஏனைய கட்டடங்களும் திருத்தப்படும்.**

**சேதமடைந்த வார்ட்டுகள், கட்டடங்களைத் திருத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் டாக்டர் நச்சினார்க்கினியன் போதனா வைத்தியசாலைகள் அமைச்சினால் கேட்கப்பட்டுள்ளார்.**

**சேதமடைந்த கட்டடங்களைத் திருத்துமாறு கேட்கப்பட்டிருப்பதால், யாழ். ஆஸ்பத்திரியை மூடுவதென்ற முந்திய முடிவை அரசாங்கம் மாற்றிக்கொண்டுவிட்டதா என்ற கேள்வி ஆஸ்பத்திரி வட்டாரங்களில் எழுந்துள்ளது. அனேகமாக அவ்வாறான ஒரு முடிவுக்கு வந்தபின்னரே சேதமடைந்த வார்ட்டுகளைத் திருத்துமாறு உத்தரவிட்டிருக்க வேண்டும் என நம்பப்படுகிறது.**

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி சுமார் எட்டுத் தடவைகள் யாழ் கோட்டையிலிருந்து வந்த ஷெல்களினால் தாக்குண்டது.

மார்ச் மாதம் முப்பதாம் திகதி இடம்பெற்ற பாரிய ஷெல் தாக்குதலினால் ஒன்பது நோயாளர்கள் மரணமானார்கள்.

இது சர்வதேச மட்டத்தில் பெரும் அபகீர்த்தியை உண்டாக்கியதைத் தொடர்ந்து, இராணுவ முகாமை மூடுவதற்குப் பதில் ஆஸ்பத்திரியை மூட அரசு முடிவு செய்திருந்தது.

மே மாதம் எட்டாம் திகதியுடன் ஆஸ்பத்திரியை மூடுமாறு போதனா வைத்தியசாலைகள் அமைச்சு திடீர் உத்தரவு பிறப்பித்திருந்தது.

### இடை நிறுத்தம்

ஆஸ்பத்திரி டாக்டர்களும், ஊழியர்களும், பொது மக்களும் தெரிவித்த கடும் ஆட்சேபத்தைத் தொடர்ந்து ஆஸ்பத்திரியை மூடும் உத்தரவு இடை நிறுத்தப்பட்டிருந்தது.

ஆஸ்பத்திரிப் பகுதியை சண்டை தவிர்ப்பு பிரதேசமாக்கும் முயற்சிக்கான பேச்சுக்கள், போராளிகள் விதித்த நிபந்தனைக்கு அரசு இணங்காததால் நடக்கவில்லை.

அந்தமட்டில் ஆஸ்பத்திரி விவகாரம் நிச்சயமற்ற நிலையிலும், ஆஸ்பத்திரி இயங்கத் தொடங்கி தொடர்ந்து இயங்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

14-07-1987

செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:-
10.30 முதல் 12.00வரை
ராகுகாலம்:-
3.00 முதல் 4.30 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## உண்மையைச் சொன்ன வல்லுநருக்கு ஸ்ரீலங்கா கொடுத்த பரிசு!

சென்னை, ஜூலை 14
சுவீடனைச் சேர்ந்த சிங்கள பௌத்த மத இயல் வல்லுநரான திரு. பீட்டர் கார்ட் என்பவரை கொழும்பு அரசு நாட்டை விட்டு வெளியேற்றி உள்ளது.

இவர் கொழும்பில் இருந்து நேற்று சென்னை போய்ச் சேர்ந்தார்.

அங்கு இவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இலங்கையில் புத்தமத தீவிரவாத நிறுவனங்கள் நடந்து கொள்ளும் முறையைப் பற்றி நான் குறை கூறினேன்.

இது இலங்கை அரசுக்குப் பிடிக்கவில்லை. என் மீது கோபம் கொண்ட இலங்கை அரசு இறுதியில் என்னை வெளியேற்றிவிட்டது.

இலங்கையில் புத்தமத நிறுவனங்கள் தமிழருக்கு எதிராக, புத்தமதக் கொள்கைக்கு முரணாக நடந்து கொள்கின்றன.

இப்படி அவர் தெரிவித்தார். (இ-எ)

## கந்தளாயில் 4 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்

கொழும்பு, ஜூலை 14
கந்தளாயில் கடந்த ஞாயிறு இடம் பெற்ற நிலக்கண்ணி வெடித் தாக்குதலில் 4 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

நான்கு சிப்பாய்கள் படுகாயமடைந்தனர்.

இச் சம்பவம் கண்டல்காடு என்னும் இடத்தில் இடம் பெற்றது. (இ-எ)

## யாழ் ஆஸ்பத்திரிக்கும் செஞ்சிலுவைச் சங்கத்துக்கும் அம்புலன்ஸுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 14
யாழ் போதனா வைத்தியசாலைக்கும், யாழ் செஞ்சிலுவைச் சங்கத்துக்கும் இரண்டு புதிய அம்புலன்ஸ் வண்டிகள் வரவுள்ளன.

யாழ் ஆஸ்பத்திரிக்கான அம்புலன்ஸை போதனா வைத்தியசாலைகள் அமைச்சும், செஞ்சிலுவைச் சங்கத்துக்கான அம்புலன்ஸை ஸ்ரீ லங்கா செஞ்சிலுவைச் சங்கமும் அனுப்பிவைக்கின்றன.

ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம்வந்து நிலைமைகளை உணர்ந்து சென்றதன் பின்னரே இவைகளை அனுப்பஅரசு இணங்கியது.

யாழ் போதனா வைத்தியசாலைக்கென ஏற்கனவே ஒதுக்கப்பட்ட அம்புலன்ஸ் வண்டியை யாழ்ப்பாணத்தில் நிலைமை சரியில்லை என்ற காரணத்தால் போதனா வைத்தியசாலைகள் அமைச்சு தடுத்து வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அடுத்த வாரம் அளவில் இரண்டு அம்புலன்ஸுகளும் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது- (இ-10)

## வின்சென்ட் மீண்டும் எம். பி.

கொழும்பு, ஜூலை 14
கொழும்பு வடக்கு எம்.பியாக மீண்டும் திரு. வின்சென்ட் பெரேராவையே நியமிப்பது என்று ஐ.தே.க செயற்குழு நேற்று ஏகமனதாக தீர்மானித்தது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் திரு. வின்சென்ட்பெரேரா அமைச்சர், எம் பி. பதவிகளை ராஜினாமாச் செய்திருந்தார்.

அவரையே மீண்டும் எம்.பி யாக நியமிக்கும் தீர்மானத்தை ஐ.தே.க. எடுத்து இருப்பதாக கட்சித் தலைவர் ஹரிஷா அபயவர்த்தனா தெரிவித்தார். (இ-எ)

## 19 சிப்பாய்களே பலிஎன்கிறதுஅரசு

கொழும்பு, ஜூலை 14
கடந்த எட்டு நாட்களாக வடமராட்சியில் நடந்த மோதல்களில் 19 சிப்பாய்களே கொல்லப்பட்டனர் 58 சிப்பாய்கள் காயமடைந்தனர்.

இப்படி கொழும்பில் அரசுக் குறிப்பு ஒன்று தெரிவித்தது.

ஞாயிறு நடந்த மோதல்களில் 20 போராளிகளும் 9 சிப்பாய்களும் கொல்லப்பட்டனர் என்று அக் குறிப்பு தெரிவித்தது. (இ-எ)

## ஆயிரம்தொன் உணவுப் பொருளுடன் நிக்கோரேட்

சென்னை, ஜூலை 14
அடுத்த இந்திய உணவுக் கப்பலில் ஆயிரம் தொன் உணவுப்பொருள்கள் காங்கேசன்துறைக்கு அனுப்பி வைக்கப்படும்.

சப்பலின் பெயர் 'நிக்கோரேட்' என்பதாகும்.

இன்னும் சில தினங்களில் இக்கப்பல் சென்னைத் துறைமுகத்தில் இருந்து புறப்படும்.

'பொறுக்கா-2' கப்பலுக்குப் பதிலாக இப் புதிய கப்பலை இந்திய அரசு அனுப்ப உள்ளது. (இ-எ)

## கோயிலில் தஞ்சமடைந்திருந்த தாயும் பிள்ளையும் ஷெல்லுக்கு பலி

யாழ்ப்பாணம், ஜூலை 14
நெடியகாடு பிள்ளையார் கோயிலில் தஞ்சம் அடைந்திருந்தவர்களில் தாயும் பிள்ளையுமான இருவர் ஷெல்லுக்குப் பலியானார்கள்.

இச்சம்பவம் ஞாயிறன்று இடம்பெற்றது.

செல்வம் என்பவரின் மனைவியும் (30 வயது), அவரின் நான்கு வயது குழந்தையுமே கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

சம்பவத்தைத்தொடர்ந்து அங்கிருந்த ஏனையோர் கோயிலைவிட்டு வெளியேறினர்.

இதற்கிடையில் வல்வெட்டித்துறை வேம்படிப் பகுதியில் ஷெல் விழுந்து வெடித்ததினால் புகலிடம் தேடிச்சென்றவர்களில் வயோதிபர்கள் இருவர் கொல்லப்பட்டனர்.

அருணாசலம் மாஸ்டர் (85 வயது), கிளி 70 (வயது)ஆகிய இருவருமே இப்படிக் கொல்லப்பட்டனர் என்று அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, வல்லை நாற்சந்தியில் அடுத்தடுத்து வந்துவிழுந்து வெடித்த மூன்று ஷெல்களினால் 4பேர் காயமடைந்தனர்.

அந்த நால்வரும் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் விவரம் வருமாறு:-

வெ. காந்தாமணி (36 வயது) ந. கலாநிதி தேவி (36 வயது), ம. சந்திரவதனா (30 வயது).

இவர்கள் மூவரும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள்.

கணேசலிங்கம் தங்கம்மா (வயது 55) வல்வெட்டி. (இ-10)

## இலங்கை அரசிடமிருந்து புதிய யோசனை எதுவும் இல்லை

### இந்திய தூதரக அதிகாரி கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 14
இலங்கை அரசிடம் இருந்து புதிய யோசனைகள் எதுவும் கிடைக்கவில்லை;

கொழும்பில் இந்தியத் தூதரக அதிகாரி ஒருவர் நேற்று இப்படித் தெரிவித்தார்.

இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற்றுக்கும் இலங்கை அமைச்சர்கள் இருவருக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்கள் குறித்து கருத்து வெளியிடும் போதே அந்த அதிகாரி இப்படித் தெரிவித்தார்.

இம் மாதம் முதலாம் திகதி பிரதமர் ராஜீவ் காந்தி, ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு அனுப்பிய கடிதத்தில் இனப் பிரச்சினைத் தீர்வுக்கு தெளிவான, திட்டவட்டமான புதிய யோசனைகளைச் சமர்ப்பிக்குமாறு கோரியிருந்தார் என்பதையும் அந்த அதிகாரி நினைவு படுத்தினார்.

இந்திய உணவுப் பொருள் விநியோகம் பற்றி கொழும்பு அரசு வட்டாரங்கள் தெரிவித்த குற்றச்சாட்டுக்களையும் அந்த அதிகாரி நிராகரித்தார். (இ-எ)

## வவுனியா விகாராதிபதி இன்று சென்னை பயணம்

### தமிழர் அமைப்புக்களைச் சந்திப்பார்

கொழும்பு, ஜூலை 14
வவுனியா விகாராதிபதியான வண. சியம்பலகஸ்வெவ விமலசார தேரோ இன்று செவ்வாய்க்கிழமை சென்னை செல்கின்றார்.

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு ஒன்றைக் காணும் நோக்கத்துடன் தமிழர் அமைப்புக்களைச் சந்தித்துப் பேசவே தேரர் தமிழ்நாடு செல்கிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் இருந்து வந்த அழைப்பை ஏற்றே தேரர் அங்கு செல்கிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

தேரருடன் சர்வோதய இயக்கத்தின் அனுராதபுரப் பிராந்திய வெளிக்களப் பணிப்பாளர் ஹர்ஷா குமார நவரட்ணவும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு இணைப்பு: ஆராய ஆணைக்குழு?

கொழும்பு, ஜூலை 14
வடக்கு, கிழக்கு இணைப்பு பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஆணைக்குழு ஒன்றை நியமிக்கும் யோசனையின் சகல அம்சங்களையும் கொழும்பு அரசு தீவிரமாக பரிசீலனை செய்து வருகின்றது.

இப்படி கொழும்பில் இருந்து வெளிவரும் 'தஐலண்ட்' ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஆணைக்குழு நியமிக்கும் முடிவு மேற்கொள்ளப்பட்டால், வடக்கு — கிழக்கு இணைப்புப் பற்றிய விஷயத்துக்கு ஓர் இறுதி முடிவு காணுவதில் அதன் அறிக்கை முக்கிய பங்கை வகிக்கும் —

இப்படி அரசு உயர்மட்ட வட்டாரம் ஒன்று கூறியதாகவும் 'தஐலண்ட்' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

**விற்பனைக்கு**

வட்டுக்கோட்டையில் L. P. காஸ் விற்பனைக்குண்டு. விற்பனையாளர்; ஸ்ரீ முருகன் அரிசி ஆலை, (பாய் மில்) மூளாய் றோட், வட்டுக்கோட்டை (3218)

28-7-87, செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கால்நடை வைத்தியர் ...ாரியாலயத்தில் ஒரு நாள் கோழிக்குஞ்சுகள் (பேடு. சேவல், இறைச்சிக்குஞ்சு] விநியோகிக்கப்படும். பெற விரும்புவோர் தமது கால்நடை வளர்ப்போர் சங்க கிளைகளிடமோ, யாழ். கால்நடை வளர்ப்போர் சங்க உறுப்பினர்களிடமோ, யாழ் கால்நடை வைத்திய காரியாலயத்திலோ 20-7-87 க்கு முன்பு முற்பணம் செலுத்தி பதிவு செய்து கொள்ளவும். (1274)


## சிங்களவர்களும் சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்

கொழும்பு, ஜூலை 14

புதிய ஆசிரியர்கள் நியமனஞ் செய்யப்படும் போது சிங்களவர்களும் பாதுகாப்பு அத்தாட்சிச் சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படவுள்ளது.

இது சம்பந்தமாகக் கல்விசேவை ஆணைக்குழு ஆராய்ந்து வருவதாகத் தெரிகின்றது

ஜே. வி. பியினர், ஆசிரியர்களாகவும் அரச சேவைக்குள் ஊடுருவல் செய்வதாக கிடைத்த தகவல்களைத் தொடர்ந்தே அரசு இந்த நடவடிககையை எடுக்க உள்ளது.

இதுவரை காலமும் ஆசிரிய நியமனம் பெறுபவர்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்களிடமிருந்து மட்டுமே பாதுகாப்பு அத்தாட்சிச் சான்றிதழ் கேட்கப்பட்டு வந்தது.

இனி தமிழரும் சிங்களவரும் பாதுகாப்பு அத்தாட்சிச் சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

(உ-எ)

# வடபகுதி முகாம்களில் உள்ள திருமலை அகதிகளின் பரிதாபநிலை

## யாழ் அரச அதிபருக்கு நலன்புரிச்சங்கம் மகஜர்

யாழ்ப்பாணம், ஜூலை 14

வடபகுதி முகாம்களில் உள்ள திருகோணமலை மாவட்ட அகதிகளுக்குக் கூட அரச நிவாரணமோ செஞ்சிலுவைச் சங்க மூலம் வழங்கப்படும் நிவாரணமோ வழங்கப்படவில்லை.

இப்படி திருகோணமலை மாவட்ட அகதிகள் நலன் புரிச் சங்கம் யாழ் அரச அதிபருக்கு அனுப்பியுள்ள மகஜரில் சுட்டிக் காட்டியுள்ளது.

மகஜர் வருமாறு:

வன்செயல் காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து வந்த சுமார் எண்ணாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 36 ஆயிரம் பேர் வரை வடபகுதியில் வசித்து வருகின்றனர்.

இவர்களில் 1,200 குடும்பங்களுக்கு மட்டுமே அரச நிவாரணம் வழங்கப்படுகின்றது.

ஏனையோர் நிவாரணம் மறுக்கப்பட்ட நிலையில் அகதிமுகாம்கள், உறவினர் வீடுகளில் வசித்து வருகின்றனர்.

அச்சுவேலி, வலிகாமம், வடமராட்சிப் பகுதிகளில் வாழ்ந்து வந்த திருமலை அகதிகள் மே 26இல் ஆரம்பமான இராணுவத்தாக்குதலைத் தொடர்ந்து பாதிப்புக்குள்ளாகி யாழ் மாவட்டத்திலுள்ள பல்வேறு அரச அதிபர் பிரிவுகளில் வசிக்கின்றனர்.

இவர்களுக்கு, திருகோணமலை வாசிகள் என்று கூறி அவர்களின் பெயர்களைப் பதிந்து நிவாரணம் வழங்க சில கிராமசேவை அதிகாரிகள் மறுக்கின்றனர்.

இந்திய செஞ்சிலுவைச் சங்கம் மூலம் வழங்கப்படும் நிவாரணப் பொருள்களும் திருமலை அகதிகளுக்கு இது வரை விநியோகிக்கப்படவில்லை.

முகாமில் உள்ளவர்களுக்குத் தான் முதலில் இந்த உதவி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால் முகாம்களில் கடந்த ஒருவருடத்துக்கு மேலாக இருந்து வரும் திருமலை அகதிகளுக்கு இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் நிவாரண உதவி மறுக்கப்பட்டுள்ளது.

இப்படி அரச அதிபருக்கு அனுப்பிய மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## குழந்தை ஆணா அல்லது பெண்ணா?

கொழும்பு, ஜூலை 14

பிறக்கப்போகும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதைக் கண்டுபிடிக்கும் கம்பியூட்டர் மயப்படுத்தப்பட்ட ஸ்கானர் இயந்திரம் கொழும்பு காஸில் வீதி பிரசவ ஆஸ்பத்திரியில் பொருத்தப்படவுள்ளது.

குழந்தை கருவில் அடைந்துவரும் வளர்ச்சி அதன் பால் மற்றும் விவரங்களை இந்த இயந்திரம் சேகரித்து வைத்து இருக்கும்.

(இ-எ)

# சண்டிலிப்பாய்ப் பகுதி 21 அகதி முகாம்களுக்கு

## இந்திய நிவாரணப் பொருள்

பண்டத்தரிப்பு, ஜூலை 14

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 21 அகதி முகாம்களில் உள்ளவர்களுக்கு இந்திய துயர் துடைப்பு உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

கடந்த புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் 526 குடும்பங்களைச் சேர்ந்த 2368 பேருக்கு அரிசி, கோதுமை மா, சமையல் எண்ணெய், தீப்பெட்டி, பருப்பு, பால் மா, மண்எண்ணெய், சீனி என்பன வழங்கப்பட்டன.

இந்திய செஞ்சிலுவைச் சங்கம்பிரதிநிதி திரு. கே. சகால் வலி. தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் செல்வி சாந்தி சுப்பிரமணியம் ஆகிய இருவரும் முதலில் பொருள்களை வழங்கி விநியோகத்தை தொடக்கி வைத்தனர்.

யாழ்ப்பாண செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த திரு. கனகரத்தினம் பாலசுப்பிரமணியம், திரு. அருணைகாந்தன் சமாதானநீதிவான், டாக்டர் பாலநாதன் ஆகியோர் பிரசன்னமாகி இருந்தனர்.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு பொருளாதார அபிவிருத்தி அலுவலர் திரு. ஆறுமுகதாசன் விநியோகிக்கும் அளவு, நிறை என்பனவற்றின் நேர்த்தியைக் கவனித்தார்.

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்க நுகர்ச்சிப்பகுதி முகாமையாளர் திரு. ஸ்ரீஸ்கந்தராசா பொருள்களின் பங்கீட்டிற்கு பொறுப்பாக கடமையாற்றினார்.

(இ-120)

# ஜீ.சி.ஈ. உயர்தர மாணவர் கல்வித் தரம்

## அறிய நாடளாவிய ஆய்வு

கொழும்பு, ஜூலை 14

ஜீ.சி.ஈ. சாதாரண உயர்தரப் பரீட்சைகள் எடுக்கும் மாணவரின் கல்வித்தரம் குறித்து நாடளாவிய ஆய்வு ஒன்றை நடத்த பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்து உள்ளது.

பாடசாலை மட்டத்தில் இந்த ஆய்வு முதலில் நடத்தப்படும்.

பாடசாலையில் இருந்து தோற்றிய மாணவர் விவரம், சித்தி எய்திய பாடங்கள் விவரம் ஆகியன கொண்ட அட்டவணை ஒன்றை திணைக்களம் தயாரித்து உள்ளது.

பெற்றோருக்கும் இந்த அட்டவணை, மாணவனின் அக்கறை குறைந்த பாடங்களைக் காட்டும் இந்த அட்டவணையின் படி கடந்த ஜீ. சி.ஈ. சாதாரண பரீட்சையில் கொழும்பு நகரில் உள்ள தேவி பாலிக வித்தியாலயம், விசாக வித்தியாலயம், கண்டி பெண்கள் உயர்தரக் கல்லூரி ஆகியன சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருந்தன.

கடந்த ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி, கொழும்பைச் சேர்ந்த பெண்கள் கல்லூரி, ஹோலி பமிலி கொன்வன்ட் ஆகியன சிறந்த பெறுபேறுகளைப் பெற்றன.

ஆய்வின் பெறுபேறுகளை புத்தகமாக வெளியிட்டு பள்ளிக்கூடங்களுக்கு விநியோகிக்கவும் பரீட்சைத் திணைக்களம் முடிவு செய்து உள்ளது.

(இ-எ)

**மக்கள் முகம்**

## தொழிலாளர் அமைப்பு

வடமராட்சி, ஜூலை 14

பாதிக்கப்பட்ட நாளாந்த தொழிலாளர் அமைப்பு றக்கா புனித திரேசம்மாள் ஆலயத்தில் பங்குத்தந்தை திரு. ஆர். யோசப் அடிகளின் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் எஸ். அமலதாசன், உபதலைவர்: எ. செபஸ்தியாம்பிள்ளை, செயலாளர் ந. தனராஸ் உபசெயலாளர் க. வாமதேவன், பொருளாளர் வ. சந்திரசேகரன்.

## பத்திரிகையாளர்களையும் முகாம்களில் தங்க வைக்க நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 14

வடபகுதியில் உள்ள பாதுகாப்பு முகாம்களில் பத்திரிகையாளரையும் தங்க வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

மாறி மாறி பத்திரிகையாளர்கள் முகாம்களில் தங்கியிருந்து வடபகுதி நிலைமை தொடர்பாக நேரடியாகச் செய்திகளை பெற உதவுவதே இத்திட்டத்தின் நோக்கம் என்று தெரிய வருகின்றது.

தாக்குதல் நடத்தப்படும் இடங்களுக்கும் படையினருடன் இப்பத்திரிகையாளர்களும் அழைத்துச் செல்லப்படுவர்—

இப்படி அமைச்சு வட்டாரம் ஒன்று தகவல் தெரிவித்ததாக ''ஐலண்ட்'' ஞாயிறு இதழ் செய்தி வெளியிட்டிருக்கின்றது.

(இ-எ)

### உதவி வைத்திய அதிகாரிகள்

கொழும்பு, ஜூலை 14

நூறு உதவி வைத்திய அதிகாரிகளை நியமிக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

கிராம வைத்தியசாலைகள், மத்திய டிஸ்பென்சரிகள் ஆகியவற்றில் இவர்கள் நியமனம் செய்யப்படுவர்.

இது சம்பந்தமான அறிவித்தல் அரச வர்த்தமானிகள் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

(இ-எ)

# மட்டக்களப்பில் 4 பிரதேச சபைகளுக்கு மட்டும் வேட்புமனுத் தாக்கல்

மட்டக்களப்பு, ஜூலை 14

மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்கு பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்கள் மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

காத்தான்குடி பிரதேச சபைக்கு இஸ்லாமியமெய்ஞானபேரவை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்புகள் சுயேச்சையாக ஐ.தே.க. எதிர்த்து வேட்புமனு தாக்கல் செய்தன. இறுதியில் இஸ்லாமிய மெய்ஞானபேரவை வாபஸ் பெற்றது.

ஏறுவூர் பிரதேச சபைக்கு ஐ.தே.க.வை எதிர்த்து கட்டுப்பணம் செலுத்திய சுயேச்சைக் குழு இறுதியில் வேட்புமனு தாக்கல் செய்ய வில்லை. இதனை அடுத்து ஐ.தே.க. போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டது.

இப்பகுதியில் தமிழர் 35 சதவீதம் வாழுகின்றனர்.

ஓட்டமாவடி பிரதேச சபைக்கு சுயேச்சைக் குழு போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழர் பெரும்பான்மையாக வாழும் மாநகரசபை உட்பட 8 பிரதேச சபைகளுக்கு எவரும் வேட்புமனு தாக்கல் செய்ய முன்வரவில்லை.

இறுதி நாள் வாழைச்சேனை பிரதேச சபைக்கு ஐ.தே.க. வேட்புமனு தாக்கல் செய்தது.

இதனை அடுத்து ஐ.தே.க. போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டது.

ஐ.தே.க. வேட்பாளர் பட்டியல்களை கச்சேரியில் மட்டக்களப்பு இரண்டாவது எம்.பி. ஐனுப் அகமத் ரிஸ்வி சின்னலெப்பை கையளித்தார்.

ஐ.தே;க. வேட்பாளர்களை போட்டியின்றி தெரிவு செய்ய காத்தான்குடியில் இவர் எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை. (இ-21)

# இந்தியக் கப்பல் மேலும் அனுப்புவதாயின் பேச்சு நடத்த வேண்டும்

## அமைச்சர் அத்துலத் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 14

மேலும் உணவுக் கப்பல்களை அனுப்ப வேண்டும் என்றால் புதிதாக பேச்சுக்கள் இரு நாடுகளுக்கும் இடையில் நடத்தப்பட வேண்டும்.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி வீக்கெண்ட் பத்திரிகைக்கு இப்படித் தெரிவித்திருக்கிறார்.

தற்போதைக்கு இந்தியாவின் நான்கு உணவுக் கப்பல்களில் வரும் உணவுப் பொருள்களை மட்டுமே ஏற்றுக் கொள்வது என்று அரசு முடிவுசெய்துள்ளது தெரிந்ததே.

உணவுக் கப்பல்கள் யாழ் குடாநாடு வருவதற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதி, சைப்பிரஸ் போன்ற ஒரு நிலையைத் தான் யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தப்போகின்றது. இது குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

—இப்படி அமைச்சர் ஒருவர் தெரிவித்தாராம். (உ-எ)

# தென்மராட்சி: உடனடி நிவாரண நடவடிக்கைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 14

வடமராட்சிப் பகுதியில் இருந்து தற்பொழுது பூரணமாக வெளியேறிக்கொண்டிருக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு தென்மராட்சிப் பகுதியில் வைத்து உடனடியாக நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளன,

இதற்கான ஒழுங்குகளை யாழ் செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்டுள்ளது.

இதேவேளை தென்மராட்சிப் பகுதியில் இருந்தும், வடமராட்சிப் பகுதியில் இருந்தும் வெளியேறி உறவினர் வீடுகளில் தங்கியிருக்கும் பாதிக்கப்பட்டோர் அந்தந்தப் பகுதி உதவி அரசாங்க அதிபருடன் [illegible] வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(இ-10)

### கள்ளு வாங்கிக் கொடுத்த நபர்

வடமராட்சி, ஜூலை 14

பொலிகண்டிப் பகுதியில் இருந்த மினிமுகாம் இராணுவத்தினருக்குக் கள்ளு வாங்கிக் கொடுத்த நபர் ஒருவரும் சிப்பாய்களின் தாக்குதலுக் [illegible] பொது மக்களுடன் ஓட்டமும் [illegible] தென்மராட்சி வந்து சேர்ந்தார்.


**நீத்தார் பட்டியல்**

**சிவகுருநாதர் -- தில்லையம்பலம்**

சிவகுருநாதர் தில்லையம்பலம் (மலாயன் பென்சனர், மூளாய் றோட், வட்டுக்கோட்டை) 13-07-87 காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-07-87 மாலை நடைபெற்றது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:-

திருமதி கமலாம்பிகை - தில்லையம்பலம் (1278)


## ★ செய்திக்கொத்து ★

### யாழ் - வவுனியா கட்டணம் ரூ. 40-00

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாணம் — வவுனியா தனியார் பஸ் கட்டணம் நாற்பது ரூபாவாக இருக்க வேண்டும் என்று வட பிராந்திய மினிபஸ் சேவைச் சங்கம் தீர்மானித்துள்ளது. கடந்த 8 ஆம் திகதி சங்கத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(இ-10)

### கலைமகள் சனசமூக நிலையத்தில் அகதிகள்

கொக்குவில், ஜூலை 14

வடமராட்சிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்தோரில் 91 குடும்பங்களைச் சேர்ந்த 382 பேர் அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இவர்களை நிலைய மக்கள் சென். ஜேம்ஸ் தேவாலயம், காந்தி சனசமூக நிலையம், சலாஜோதி விளையாட்டுக் கழகம், அரியாலை தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம் போன்ற ஸ்தாபனங்களின் உதவியுடன் பராமரித்து வருகின்றனர்.

(இ-69)

### 300 ஆவது ஆண்டு நிறைவு தினம்

வட்டுக்கோட்டை, ஜூலை 14

வண. யோசவ் வாஸ் அடிகளார் ஈழத்திற்கு விஜயம் செய்து 300 ஆவது ஆண்டு நிறைவு பெறுவதை முன்னிட்டு சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்தில் அன்னாரின் சிலை ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

சில்லாலை பங்குத்தந்தை அருட்திரு வ. இருதயதாஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திருமலை — மட்டக்களப்பு முன்னால் ஆயர் அதிவண எல். ஆர். அன்ரனி ஆண்டகை சிலையைத் திரை நீக்கம் செய்து வைத்தார். (இ-161)

### விசர்நோய்அபாயம்

குருநகர், ஜூலை 14

குருநகர்ப்பகுதிபொதுமக்கள் பெருமளவில் வெளியேறி வேறிடங்களில் இருப்பதால் வீடுகளில் வளர்க்கப்பட்டு வந்த நாய்கள் உணவு குடி, தண்ணீர் இன்றி விசர் நோய் பீடிக்கும் நிலையில் உள்ளன. (இ)

### அகதிகள் பற்றி ஆராயக் கூட்டம்

கொடிகாமம், ஜூலை 14

சாவகச்சேரி, கைதடி ப.நோ.கூ சங்க எல்லைக்குள் இடம் பெயர்ந்து வந்தோரின் நலன் கருதி சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கூட்டம் ஒன்று இன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (இ-75)

### மீண்டும் மரணப் பொறி

குருநகர், ஜூலை 14

யாழ்- பாங்ஷால் வீதி மீண்டும் மரணப் பொறியாக மாறி வருகிறது. யாழ்-பொலீஸ் நிலைய அரசமர 'சென்றி'யில் இருந்து யாழ்-கோட்டை இராணுவ சிப்பாய்கள் தினமும் நடத்தி வந்த துப்பாக்கிச் சூட்டை அடுத்து போராளிகள் பாங்ஷால் வீதி அரணைப் பலப்படுத்தி இருந்தனர். தற்போது மீண்டும் அடிக்கடி துப்பாக்கிச் சூடுகள் இடம் பெறுகின்றன. (இ)


**"மில்க் வைற்"**

அபிமானிகள்! ஆதரவாளர்கள்!

எங்கள் பணிவான அறிவிப்பு

இலக்கியம் இன்றேல் இலக்கணம் இல்லை
எள் இன்றேல் எண்ணெய் இல்லை
மூலப்பொருள் இன்றேல் உற்பத்தி இல்லை
தேங்காய் எண்ணெய் இன்றேல்
மில்க்வைற் சவர்க்காரம் இல்லை.

அன்பர்களே!

தேங்காய் எண்ணெய் மீண்டும் விலை உயர்ந்து விட்டது. நாங்கள் தயங்கித் தயங்கி உற்பத்திகளுக்கு விலையை சிறிது உயர்த்தி உள்ளோம். மனங்கொள்ளாது மன்னிக்கவும்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.



மீண்டும் வழமைபோல் வெளிநாடு செல்பவர்களுக்கு

**ஓர் அரிய சந்தர்ப்பம்**

★ ஜெர்மனி ★ பிரான்ஸ் ★ பெல்ஜியம் ★ நோர்வே ★ கனடா

மேற்கூறிய நாடுகளுக்கு செல்ல விரும்புவோர் உடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும். உடனே பிரயாணம் செய்யத்தக்கதாக எல்லா வசதிகளும் ஒழுங்குகளும் செய்து தருவோம்.

எங்கள் ஏனைய சேவைகள்:-

பல்வேறு உலகநாடுகளுக்கும் துரிதமான பிரயாண ஒழுங்குகள்:-

★ சலுகைக் கட்டணங்களில் விமான ரிட்டுகள் ★ விசா ★ பாஸ்போட் ★ பாஸ்போட் புதுப்பித்தல் ★ பொன்ட் செய்தல் ★ Confirmations, ★ Re - confirmations, Cancellation.

**MACK TRAVELS**

இல. 8, முதலாவது ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(1279)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

பெற்றது சிறிதே என்றாலும் திருப்தியுற முடியாதவன் முடிவில்லா துன்பத்துக்கு ஆளாகிறான்.

— காரிக்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073
14.07.1987　த. பெ. இல: - 23

# இனி என்ன செய்யும் இந்தியா....?

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சியாக, ஸ்ரீலங்கா அரசு, 1986 டிச 19 யோசனைக்கு அதிகமாக எதனையும் முன்வைக்கப் போவதில்லை. இதுகுறித்து கொழும்பு அமைச்சர்கள் இருவர் அங்குள்ள இந்தியத் தூதுவரிடம் தெரிவித்து விட்டனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டாயிற்று என்பதே அதன் அர்த்தமாகும். இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கொழும்புக்குள் அடித்துவிட்ட பந்து அங்கேயே முடங்கிக்கிடக்கப் போகிறது.

டிசம்பர் 19 யோசனைக்கு அதிகமான ஒரு திட்டத்தை எதிர்பார்த்தே திரு. காந்தி பந்தைக் கொழும்புப் பக்கத்திற்குள் வீசினார். ஆனால் கொழும்பு அப்படிச் செய்யத் தயாரில்லை என்று அறிவித்துவிட்டது.

ஈழத் தமிழ் மக்களின் ,அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக, டிச. 19 யோசனைகள் இல்லை. தமிழ் மக்களின் சுதந்திரத்துக்கும், பாதுகாப்புக்கும், தமிழ் மண்ணின் உறுதிப்பாட்டுக்கும் அது உத்தரவாதம் அளிக்கவில்லை.

ஆகையால் அதற்குக் கூடுதலான, வடக்கு கிழக்கு இணைந்த தனிச் சுயாட்சி அமைப்பாவது முன்வைக்கப்பட்டால் தான், அதனை அடிப்படையாக வைத்து, ஒரு திருப்திகரமான தீர்வைக் கொண்டுவர முடியும் என்று இந்தியா கருதுகிறது.

அவ்வாறான ஒரு திட்டத்தை எதிர்பார்த்துத்தான் திரு. காந்தி பந்தைக் கொழும்புப் பக்கத்திற்குள் வீசி இருந்தார். ஆனால் பதில் ஆட்டம் நடத்த ஸ்ரீலங்கா விரும்பவில்லை.

வடக்கும்-கிழக்கும் இணையும் தமிழர் தாயகக் கோட்பாடு ஸ்ரீலங்கா அரசுக்கு எப்போதுமே வேம்பெனக் கசக்கிறது. ஆனால் தமிழ் மக்களோ அதனை அடிப்படையாகக் கொள்ளாத எந்தத் தீர்வையும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. கடந்த நான்கு வருடங்களாக அனுபவிக்கும் அவலங்களும் இன்னல்களும் தமிழர் தாயகம் இல்லாத எந்தத் தீர்வையும் ஏற்கக்கூடாது என்று அவர்களுக்குள் நின்று இடித்துரைத்துக் கொண்டே நிற்கின்றன.

தமிழர் தாயகத்தின் அடிப்படையில் இல்லாத எந்தத் தீர்வையும் தமிழ் மக்கள் ஏற்க மாட்டார்கள் என்று தெரிந்து கொண்டு தான், தமிழர்கள் மீது இராணுவத் தாக்குதல்களை மேற்கொண்டு அவர்களை நலியச் செய்து தமிழர் தாயகத்தை உறுதி செய்யாத அதிகாரப் பரவல் என்ற பூசி மெழுகிய சில சலுகையை தீர்வாக்கித் திணிப்பதற்குக் கொழும்பு அரசு முயல்கிறது.

ஸ்ரீலங்காவின் இந்தத் திணிப்பு முயற்சியை இந்தியா இப்போதாவது புரிந்து கொண்டிருக்கும் என நம்புகிறோம்.

இந்தியாவுக்கு நியாயமானதாகப்படும் திட்டத்தைக் கூட ஸ்ரீலங்கா அரசு ஏற்கத் தயாரில்லை என்றால், தமிழர்கள் விரும்பும் முழு உரிமைகளையும் அது வழங்கும் என்று எப்படி எதிர்பார்ப்பது? ஸ்ரீலங்காவில் அமைதியும் சமாதானமும் விரைவில் வரும் என்று நம்புவது எப்படி?

தமது முழு விருப்பமும் அரசியல் தீர்வே; ஆனாலும் அதில் சில இராணுவ அம்சங்களை (Miltary Elements) சேர்க்காமல் இருக்க முடியவில்லை என்று அமைச்சர் லலித் அமெரிக்காவில் இருந்து திரும்பியதும் ரூபவாஹினிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருந்தார். அது பொய் என்பதும், இராணுவத் தீர்வில் சிலஅரசியல் அம்சங்களைச் சேர்த்த திட்டமே அரசின் இலக்கு என்பதும் இப்போது நன்றாகப் புரிந்திருக்கிறது.

இனப்பிரச்சினைத் தீர்வை குத்துக்கட்டை போட்டு ஸ்ரீலங்கா அரசு தடுத்துவிட்டது. இதன் பிறகு இந்தியா என்ன செய்யப்போகிறது?

இலட்சக் கணக்கான ஈழத்தமிழ் அகதிகளைப் பராமரிக்கும் பெரும் பிரச்சினையை இந்தியா எதிர்நோக்குகிறது என்பது ஒருபுறம், இனப்பிரச்சினையைத் தீர்க்க மத்தியஸ்தராகக் கடந்த நான்கு வருடங்களாகப் பணிபுரிந்தது என்பது மறுபுறம்,

இவ்விவகாரத்தைத் தொப்பெனப் போட்டுவிட்டு, இந்தியா விலகுமானால், அதன் ஆளுமைக்கும், அரசியல் சாணக்கியத்துக்கும் பெரும் அபகீர்த்தி ஏற்படுவது நிச்சயம். கையாலாகாத் தனம் வெளிக்காட்டப்பட்டால் உலகத்தில் அதன் 'இமேஜ்' பெருமளவில் கெட்டுப்போகும்.

அதனால் இந்தியா தானாகவே ஒரு தீர்வைத் தயாரித்து 'இதனை அமுல் செய்யப் போகிறாயா, இல்லையா?' என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாக ஸ்ரீலங்காவிடம் கேட்கும் காலம் வந்துவிட்டது. இந்தியா அதனைத் தான் செய்யுமா? அல்லது...?

பஞ்சாப் உடன்படிக்கையை

# ஹரியாணு புதிய அரசு உதாசினம் செய்ய முடியாது

## பர்ணுலா கூறுகிறார்

சண்டிகார், ஜூலை 13 பஞ்சாப் உடன்பாடு ஹரியாணு மாநில சட்ட சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது பதவி ஏற்ற புது மாநில அரசு அந்த உடன்பாட்டை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று கூறி விட முடியாது.

பஞ்சாப் மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் சுர்ஜித்சிங் பர்ணுலா முன்சண்டவாறு தெரிவித்தார்.

தனது தலைமையிலான அகாலிதள் கட்சியின் லோங்கோவால் பிரிவு, சீக்கியத் தீவிரவாதத்தை எதிர்த்து இயக்கம் ஒன்றை நடத்தப் போவதாக திரு பர்ணுலா அறிவித்தார்.

பஞ்சாப் உடன்பாடு அமுல் நடத்தப்பட வேண்டும் என்றும் திரு. பர்ணுலா சம்பந்தப்பட்டோரைக் கேட்டுக் கொண்டார். (இ-எ)

## வெளி உலகில்

ஆப்கன் அரசமைப்பு:

# பொதுமக்கள் கருத்து அறியப்படும்

காபூல், ஜூலை 13 புதிய அரசமைப்புச் சட்டம் குறித்து மக்களின் கருத்தை அறிவதற்கு ஆப்கானிஸ்தான் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசியல் கட்சிகள் இயங்க அனுமதிக்கக் கூடியதான' புதிய அரசமைப்புச் சட்டம் ஒன்றைக் கொண்டுவர ஆப்கன் அரசு ஏற்கனவே முடிவு செய்திருந்தது தெரிந்ததே.

இச்சட்டத்தின் கீழ், நாட்டில் அமைதியை நிலை நாட்டுவதையும், சோவியத் யூனியனுடன் நட்புறவை வலுப்படுத்துவதையும் அடிப்படைக் கொள்கைகளாக ஏற்றுக் கொண்ட அரசியல் கட்சிகளை இயங்க அனுமதிப்பது என்று ஆப்கன் அரசு முடிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

# சாட் நாடு மீது தாக்க லிபியா முஸ்தீபு?

பாரிஸ், ஜூலை 13 சாட் நாட்டின் மீது மீண்டும் ஒரு தாக்குதலை நடத்த லிபியா முஸ்தீபு செய்து வருகின்றது.

—இப்படி சாட் ஜனாதிபதி ஹிஸேனி ஹாப்ரே குற்றஞ்சாட்டி இருக்கின்றார்.

சாட்டின் வட பகுதி பாலைவனப் பிரதேசத்தில் சுமார் பத்தாயிரம் துருப்புக்களை லிபியா குவித்து இருப்பதாக ஜனாதிபதி ஹாப்ரே தெரிவித்திருக்கின்றார்.

# விமானங்கள் மீதான தாக்குதல்கள் குறைந்தன

லண்டன், ஜூலை 13 இந்த ஆண்டின் முதல் ஆறு மாத காலத்தில் விமானங்கள் மீதான தீவிரவாதிகளின் தாக்குதல்கள் குறைந்து காணப்பட்டன.

இப்படி அதிகாரபூர்வமான 'பிளைட் இன்டர்நேஷனல்'— என்ற சஞ்சிகை தெரிவித்துள்ளது.

தீவிரவாதிகளின் தாக்குதல்களினால் சர்வதேச விமானப் போக்குவரத்துச் சேவைகளுக்கு 1986 தான் கூடாத ஆண்டாக இருந்தது.

இப்படி அந்தச் சஞ்சிகை மேலும் தெரிவித்தது. (இ-எ)

## றேகனுக்கு தெரிந்திருந்தது

வாஷிங்டன், ஜூலை 13 ஈரானுக்கு ஆயுதங்கள் விற்றதனால் கிடைத்த வருமானத்தை மறைமுக நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் திட்டம் பற்றி அதிபர் றேகனுக்குத் தெரிந்திருந்தது.

இப்படி அமெரிக்க வெள்ளை மாளிகையின் முன்னாள் பாதுகாப்பு அதிகாரி பொயின்ட் டெக்ஸ்டர் தெரிவித்தார்.

இக்குற்றச் சாட்டை அமெரிக்க அதிபர்றேகன் ஏற்கனவே மறுத்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

## பிலிப்பீன்ஸில் இராணுவச் சதி பிசுபிசுப்பு

மணிலா, ஜூலை 13 பிலிப்பீன்ஸ் இராணுவத்தின் ஒரு பகுதிசென்ற முப்பதாம் திகதி ஆயுதப் புரட்சி ஒன்றை நடத்தி ஜனாதிபதி திருமதி அக்கியூனேவைப் பதவிகவிழ்க்கத் திட்டம் தீட்டியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இப்படி பிலிப்பீன்ஸ் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

# அமெரிக்காவின் ஏவுகணைகள் பாக். சொந்தத் தேவைக்கு

புதுடில்லி, ஜூலை 13 ஆப்கன் பயமுறுத்தலைச் சமாளிக்க அமெரிக்கா வழங்கிய ஏவுகணைகளை பாகிஸ்தான் தனது சொந்தத் தேவைகளுக்கும் பயன்படுத்தத் தீர்மானித்துள்ளது.

அமெரிக்காவுக்குத் தெரிந்தே இந்த நடவடிக்கையில் பாகிஸ்தான் அரசு ஈடுபட்டிருப்பதாக புலனாய்வு வட்டாரங்களை ஆதாரங்காட்டி இந்திய வானொலி அறிவித்தது.

ஆப்கன் பயமுறுத்தலை சமாளிக்க மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் அமெரிக்கா இந்த ஏவுகணைகளை பாகிஸ்தானுக்கு வழங்கியது குறிப்பிடத்தக்கது.

## அஸாமில் வெள்ளம் கட்டு மீறுகிறது

கௌஹாத்தி, ஜூலை 13 அஸாம் மாநிலத்தில் வெள்ளம் இன்னும் கட்டுக்கடங்கவில்லை.

பிரமபுத்திரா நதி இன்னும் கரை புரண்டோடுகிறது.

வெள்ள நிவாரண வேலைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள இராணுவம் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## வித்தாரம்

முரளியார்' என்ன முகம் கொஞ்சம் கறுத்திருக்குது? ஏதாவது அமங்கலமான சம்பவங்கள் கிட்டடி உறவுக்குள்ளை நடந்திட்டுதோ அல்லது......

இப்பதான் அதுகளுக்குக் குறைவில்லையே. முந்திய காலத்திலை செத்தவீடு, இழவு சொல்லுறது எல்லாம் எப்பவும் ஒருக்காத்தான் நடக்கும்.

இப்ப நடக்கிறது தார்மீக ஆட்சி. அதுக்குரிய சிறப்பு இருக்க வேணும் என்டு நினைச்சாக்கும் தமிழர் மீது அரச பயங்கரவாதத்தை அதி உத்தமர் தீவிரமாய்க் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்!

இப்ப இருக்கிற தமிழனை அடுத்த அஞ்சு நிமிஷத்தாலை காண முடியயில்லை, பொம்மர் அடிச்சுது, ஹெலி அடிச்சுது என்டு செத்துப் போற காலமாய்ப் போச்சுது. வாழ்வாவது மாயம் அது மண்ணாவது திண்ணம் என்டது உலகத்தின் எந்த இனத்தாரையும் விட ஈழத்தமிழருக்குத்தான் அதிகமாய்ப் பொருந்துது.

போன நாலு வருஷங்களிலையும் எப்படியும் இருபதினாயிரம் தமிழர்கள் செத்திருக்கமாட்டினம்...?

ஒப்பரேஷன் லிபரேஷன்களை நடத்தி மேலும் மேலும் தமிழரைக் கொன்று குவிக்க எல்லே அதிஉத்தமரும் அச்சாணியாரும் நினைக்கினம்.

வடமராட்சியைப் பாக்க இல்லையே? அங்கை மக்கள் அரவமே இல்லையாம்.போனமுறை வயோதிபர், நோயாளியள் எண்டு அங்கை மிஞ்சி நிண்டுதுகள். இந்த முறை அதுகளையும் பன்னாங்கிலை வளத்தியாவது பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்திட்டுதாம் சனம்.

மந்திகை ஆஸ்பத்திரியிலை வேலை செய்த ஊழியர்களும் இடம் பெயர்ந்து விட்டார்களாம். அங்கிருந்த நோயாளர்களும் இடம் பெயர்ந்து விட்டதாகத் தகவல் கிடைச்சது.

இரண்டாவது பிரளயம் இப்ப வடமராட்சியிலை நடக்குது. முதலாவது பிரளயத்துக்குள்ளை அகப்பட்டுப் பூசா போய் அனுபவப்பட்டு வந்தஇளைஞர்கள், கலியாணம் முடிக்கிறதிலை அதிக நாட்டம் செலுத்தினவையாம். கலியாணம் செய்யாமல் வாலிபர்களாய் இருந்தவையைத்தான் அதிகம் பிடிச்சுக் கொண்டு போனவை எண்ட ஒரு ஊகத்திலை! ஆனால் கலியாணங்கள் நடக்கிறதுக்கு இடையிலை இரண்டாவது பிரளயம் வந்திட்டுது!

★ ★ ★

உனக்குத் தெரியுமா? அமெரிக்காவிலை இப்ப பெரிய ஹீரோ ஒலிவர் நோர்த் தான். நிக்கரகுவா புரட்சியாளருக்கு கொங்கிரஸ் முடிவை மீறி, ஈரான் ஆயுத விற்பனை மூலம் கிடைச்ச பணத்தைக் கள்ளத்தனமாகக் கொடுத்த விவகாரத்திலை அவர் தான் பலிக்கடா ஆகியுள்ளார். ஆனால் ஒரு ஹீரோவுக்கு உள்ள செல்வாக்கு இப்ப அமெரிக்காவிலை அவருக்கு உண்டு!

விசாரணைக் கமிஷன் முன்னுக்குத் தோன்றி அவர் கேள்வியளுக்குப் பதிலளிக்கிற விதம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்குது. அது மட்டுமில்லை அவர் சில சந்தர்ப்பங்களிலை வலுமுழங்கியாகவும் சாட்சியம் குடுத்திருக்கிறார். அவர் பாதுகாப்புக் கவுன்சில் அதிகாரியாக இருந்தவர். நிக்கரகுவா மோசடி அம்பலத்துக்கு வந்ததும் முதலில் பத

(4-ஆம் பக்கம் பார்க்க)

# பிரார்த்தனை இயக்கத்தை நாம் அரசுக்குப் பயந்து கைவிடவில்லை

## தொண்டமான் கூறுகின்றார்

கேள்வி: மே மாதம் நீங்கள் நடத்தவிருந்த பிரார்த்தனை இயக்கம் கடைசி நேரத்தில் கைவிடப்பட்டது. குறுகிய நலனுக்காக போராடும் நேரம் அல்ல இது என்று அரசுத் தலைமைப்பீடம் சொன்னதால்தான் இயக்கம் கைவிடப்பட்டதாகச் சொல்லப்படுகின்றதே.

தொண்டமான்: சரியான நிலை அதுவல்ல. 94 ஆயிரம் தொழிலாளருக்கு பிரசார உரிமை வழங்குவதில் தாமதம் காட்டப்பட்டதால்தான் பிரார்த்தனை இயக்கம் ஒழுங்கு செய்யப்பட்டது.

கேள்வி: அப்படியானால் ஏன் திடீரென்று இயக்கம் கைவிடப்பட்டது? கோரிக்கை நிறைவேறியது போல் தெரியவில்லையே.

தொண்டா: பிரார்த்தனை இயக்கம் பற்றி அரசு கவனத்துக்கு எடுத்தது. எம்மைத் திருப்திப்படுத்தவும் அரசு பின்னர் சில நடவடிக்கைகளை எடுத்தது. பின்னர் ஏன் பிரார்த்தனை இயக்கம்?

கேள்வி: பிரார்த்தனை இயக்கத்துக்கு அரசு பணிந்துவிட்டது என்று கூறுகின்றீர்களா?

தொண்டா: அரசுக்கு விடுக்கப்பட்ட பயமுறுத்தல் என்று கூறமாட்டேன்.

கேள்வி: பிரார்த்தனை இயக்கத்தை நடத்தப் போவதாக அறிவிக்காவிட்டால் பிரசா உரிமை வழங்குவது விரைவுபடுத்தப்பட்டிருக்காது — இது தான் உங்கள் எண்ணமா?

> அமைச்சர் தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சி டிக்கெட்டில் மலைநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிடுகின்றது.
>
> இந்தத்தருணத்தில் அமைச்சர் தொண்டமான் கொழும்பு நாளிதழ் 'தஐலண்ட்' ஞாயிறு (12-7-87) பதிப்புக்கு அளித்த பேட்டியின் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகிறது.

தொண்டா: ஆம்.

கேள்வி: பிரார்த்தனை இயக்கத்தைக் கைவிடுவதற்கு அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

தொண்டா: பிரசா உரிமை வழங்குவதைத் துரிதப்படுத்த உபகுழு நியமிக்கப்பட்டது.

கேள்வி: இதை பேச்சுக்கள் மூலம் நீங்கள் சாதித்து இருக்க முடியாதா?

தொண்டா: முடியாது. அதனால் தான் பிரார்த்தனை இயக்கத்தை ஒழுங்கு செய்தேன்.

கேள்வி: தீவிரவாதிகளிடம் இருந்தும் இந்தியாவிடம் இருந்தும் பயமுறுத்தல்கள் வரும் தருணத்தில் பிரார்த்தனை இயக்கமா? இப்படிக் கேட்டு அரசு வற்புறுத்தியதால்தான் பிரார்த்தனை இயக்கத்தை நீங்கள் விலக்கிக் கொண்டதாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் எமக்குத் தெரிவித்துள்ளன.

தொண்டா: வெளிநாட்டு விஷயங்கள் எமது சிந்தனையைப் பாதிக்கவில்லை.

எமது இலட்சியத்தைப் பொறுத்தவரையில் இந்திய நடவடிக்கைகள் தொடர்பற்றவை.

எமது நோக்கங்கள் நிறைவேற்றப்படாமல் இருந்திருந்தால் இந்திய நடவடிக்கையை பொருட்படுத்தாது பிரார்த்தனை இயக்கத்தை நடத்தியிருப்போம்.

கேள்வி: உங்கள் பிரார்த்தனை இயக்கம் நாட்டுக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடும் என்று சிலர் கூறியிருக்கலாம். நீங்கள் வெறும் சுயநலத்துடன்தான் இயக்கத்தை ஒழுங்கு செய்தீர்கள் என்று சிலர் சொல்லியிருக்க முடியும்.

தொண்டா: நீங்கள் தனிப்பட்ட முறையில் சுயநலமாக நடந்தால் தான் இது விஷயத்தில் சுயநலம் என்று கூற முடியும்.

எனக்காக நான் சுயநலத்துடன் நடக்கவில்லை. எனது சமூகத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# எட்டு வருடங்களுக்கு முன் அரச பயங்கரவாதத்துக்கு இரையான தமிழ்இளைஞர்கள்!

1979 ம் ஆண்டு பிறப்பிக்கப்பட்டஅவசரகாலச் சட்டம் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருந்தது. இத்தீவில் ஏனைய தடவைகளில் பிறப்பிக்கப்பட்ட அவசரகாலச் சட்ட அமுலுக்கு அதுவே புறநடையாக அமைந்தது.

மேலும் அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்ட சமகாலத்தில் வடபகுதிப் பயங்கரவாதத்தை 1979 டிசம்பர் 31க்கு முன் பூண்டோடு ஒழிக்கும்படி ஜனாதிபதி அவர்களால் தற்பொழுது கனடாவில் ஸ்ரீலங்காவின் தூதுவராக இருக்கும் தளகர்த்தா திஸா வீரதுங்காவுக்கு ஆணை வேறு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

மதவாச்சி எம். பி. திரு. மைத்திரிபால சேனநாயக்கா அந்த ஆணையைக் குறித்து நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் யூத இனப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காண்பதற்கு ஹிட்லர் தமது தளகர்த்தருக்கு இட்டிருந்த ஆணையுடன் ஒப்பிட்டிருந்தார்.

அவசரகாலச்சட்டம் பிறப்பிக்கப்பட்ட சூழ்நிலையில் 1979 யூலை 13ம் திகதி நள்ளிரவு நவாலியில் மூன்று தமிழ் இளைஞர்கள்— இன்பம், செல்வம், பாலேந்திரா ஆகியோர்— சிவில் உடையில் மோட்டார் காரில் சென்றிருந்தவர்களால் கைது செய்யப்பட்டுக் கடத்தப்பட்டனர்.

இம்மூவரில் பாலேந்திராவுக்கு என்ன நேர்ந்தது என்பது இன்றளவும் மர்மமாகவே உள்ளது. தமிழ்ப்பகுதியில் 'காணாமற்போனோர்' ஆக்கப்பட்ட முதல் தமிழ் இளைஞர் பட்டியலில் நவாலி பாலேந்திராவே இடம் பெறுவார்!

அவருடன் கடத்தப்பட்ட ஏனைய இருவரான இன்பத்தினதும் அவரது மைத்துனர்

- த. இன்பரசு -

செல்வத்தினதும் சடலங்கள் அல்லைப்பிட்டிப் பாலத்தடியில் கிடக்கக் காணப்பட்டன.

இதே இரவில் ஜீப் வண்டிகளில் சிவில் உடையில் சென்றோரால் வேறு சிலதமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டிருந்தனர்.

அவர்களுள் பருத்தித்துறை வீதி இரண்டாம் ஒழுங்கையில் வசித்து வந்த இந்துவரராஜா என்பவர் யாழ் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதும் மரண

(4 ஆம் பக்கம் பார்க்க)



## பொய்யாமொழி

**குறள்:**

குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும் நாணுடையான் கட்டே தெளிவு.

**பொருள் :**

நல்ல குடியில் பிறந்து குற்றங்களில் இருந்து நீங்கியவனை செயலைச் செய்ய அஞ்சுகின்ற நாணம் உடையவனையே நம்பித் தெளிய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனையாகின்றன
**மயூரதி வெளியீடுகள்**
1986 புதிய பாடத்திட்டத்திற்கமைய
1) ஆண்டு 7 கணிதம் - பாடமும் பயிற்சியும்
2) ஆண்டு 8 கணிதம் - பல்தேர்வு வினாக்கள்
3) ஆண்டு 10 கணிதம் - பல்தேர்வுவினாக்கள்
மாணவர் தாமாகவே மீட்டலை நிகழ்த்த உதவும் நூல்களாகும்.

# உதயன்

14-07-1987 செவ்வாய்க்கிழமை

விற்பனையாகின்றன
**மயூரதி வெளியீடுகள்**
1979 முதல் கணிதம் 9-10 பாடமும், பயிற்சியும் என்னும் நூலின் ஆசிரியர்களான **அம்பிகைபாகன் - சச்சிதானந்தன் - ஜெயபாலன்** ஆகியவர்களுள் முக்கிய பங்காற்றியவரும் தற்போது இலங்கையிலுள்ள ஒரேயொருவருமான ஆசிரியரின் ஆக்கங்கள்தான் மயூரதி வெளியீடுகளாகும்.

# பூஸாவில் உள்ளோர் விரைவில் விடுதலையாவர்

## தரகர்களிடம் பணம் கொடுத்து ஏமாறவேண்டாம் என்கிறார் பொலீஸ் அதிபர்

வடமராட்சி, ஜுலை 14
பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வடமராட்சியைச் சேர்ந்த 220 தமிழர்களும் விசாரணை முடிவடைந்ததும் விடுவிக்கப்படுவர். அதற்கிடையில் தரகர்களிடம் பணம் கொடுத்து ஏமாறவேண்டாம்.

இப்படி காலிபொலீஸ் அதிபர் திரு. குணரத்தின தெரிவித்தார்.

பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டு உள்ளவர்களைப் பார்க்கச் சென்ற உறவினர்கள் பொலீஸ் அதிபரைச் சந்தித்து முறையிட்டபோதே, பொலீஸ் அதிபர் முன்கண்ட வாக்குறுதியை அளித்தார்.

பூஸா முகாமில் 213 இளைஞர்கள் பொலீஸ் பாதுகாப்பிலும் 7 பெண்கள் பெண் பொலீஸ் பாதுகாப்பிலும் வைக்கப்பட்டுள்ளனர்.

சிறிய குற்றங்களைப் புரிந்தார்கள் என்ற சந்தேகத்தில் தான் இவர்கள் விசாரிக்கப்படுகின்றனர். விரைவில் விடுவிக்கப்படுவர்.

இப்படி பொலீஸ் அதிபர் மேலும் தெரிவித்தார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் பலர் பொக்குளிப்பான் நோயினால் பீடிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று பூஸா சென்று திரும்பிய உறவினர்கள் தெரிவித்தனர். (இ-எ-160)

### மூதாட்டி மரணம்

யாழ்ப்பாணம், ஜுலை 14
ஷெல்வெடித்த அதிர்ச்சியினால் குட்டியம்மா (80 வயது) என்ற வயோதிப மாது மரணமானார்.

இச் சம்பவம் நேற்று வல்வெட்டித்துறையில் இடம்பெற்றது.

வடமராட்சியில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் ஷெல்லடிக்குப் பயந்து வெளியேறிக் கொண்டிருந்தவர்களில் இந்த மூதாட்டியும் ஒருவர். (இ-10)

## காவலூர் கவிஞர் நினைவுதினம்

யாழ்ப்பாணம், ஜுலை 14
காலஞ்சென்ற காவலூர்க் கவிஞர் ஞா. ம. செல்வராஜாவின் 31 ஆவது நாள் நினைவு தினக்கூட்டம் காவலூர் இலக்கிய வட்டத்தின் ஆதரவில் காவலூர் இலக்கியவட்டத் தலைவர் திரு. ஆ. சபாரத்தினம் தலைமையில் இன்று நடைபெறுகின்றது.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலய முன்றலில் நடைபெறும் இந்த நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் பண்டிதர் சோ. தியாகராசபிள்ளை, திரு. எஸ். எம். யோசெப், திரு. அ. அருளப்பு, கவிஞர் தி, தில்லைச்சிவம், திரு. க. தவபாலன், திரு. வை. தியாகராசா, திரு. ஆர். எஸ். யேம்ஸ் ஆகியோர் உரையாற்றுவர்.

# தீவிரவாதிகள் தோற்கும்போது கொழும்பு மீது நிர்ப்பந்தம்

## இந்தியாவின் செயல் குறித்து பிரதமர்

லண்டன், ஜுலை 14
அரசுத் துருப்புக்களிடம் தீவிரவாதிகள் தோற்கும்போது இந்திய அரசு கொழும்பு மீது நிர்ப்பந்த நடவடிக்கைகளைமேற்கொள்கின்றது.

இப்படி பிரதமர் பிரேமதாஸ தெரிவித்தார்.

லண்டனில் இலங்கைத் தூதர் திரு. சந்திரா மொனராவல அளித்த வரவேற்புக்கு பதிலளித்து பிரதமர் பேசினார்.

பிரதமர் மேலும் சொன்னதாவது;

இராணுவத் தீர்வு காணுவதற்குத் தான் பேச்சுக்கள் என்றும் இலங்கை அரசு காலம் கடத்துகின்றது என்றும் கூறப்படுகின்றது.

உண்மை என்ன என்றால், எப்போது தீவிரவாதிகள் அரசுப் படைகளிடம் தோற்கின்றனரோ அப்போதெல்லாம் தீவிரவாதிகள் மீண்டும் பலம் பெறுவதற்காக இந்திய அரசு இலங்கை அரசை பல காரணங்களைக் காட்டி நிர்ப்பந்திக்கின்றது.

இலங்கையில் பட்டினி ஏற்பட்டதேகிடையாது.

யாழ்ப்பாணத்தில் எப்போதாவது உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது என்று கேள்விப்பட்டீர்களா?

இப்படி பிரதமர் சொன்னார். (இ-எ)

# தென் இலங்கை பொலீஸுக்கு பயமுறுத்தல்!

கொழும்பு, ஜுலை 14
தென் இலங்கையில் அரசுக்கு எதிரான நடவடிக்கைகள் பற்றி விசாரணையில் ஈடுபட்டுள்ள பொலீஸ் அதிகாரிகளுக்கு இனந்தெரியாதோரால் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட அரசியல் கட்சி ஒன்றுதான் இப்பயமுறுத்தலை விடுத்திருப்பதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

தென் மாகாணம், மேற்கு மாகாணம் ஆகியவற்றைச் சேர்ந்த பொலீஸ் அதிகாரிகளுக்கே இப்பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

அரசு எதிர்ப்பு நடவடிக்கை சம்பந்தமான விசாரணைகளை நிறுத்த வேண்டும்; இல்லாவிடில் குடும்பமே அழிக்கப்படும்—இப்படி பயமுறுத்தும் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன,

தொலைபேசி மூலமும் பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

# ஜனாதிபதி தேர்தலில் சுறுசுறுப்பாக வாக்களிப்பு

## வியாழன் முடிவு வெளிவரும்

புதுடில்லி, ஜுலை 14
இந்திய ஜனாதிபதித் தேர்தலில் நேற்று சுறுசுறுப்பாக வாக்களிப்பு நடைபெற்றது.

புதுடில்லியில் நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளையும் சேர்ந்த 807 எம். பி.க்கள் வாக்களித்தனர். முன் அனுமதிபெற்ற எம்.எல்.ஏ. ஒருவரும் புதுடில்லியில் வாக்களித்தார்.

வாக்களிப்பதற்காக நாடாளுமன்றக் கட்டடத்திற்கு ஆஸ்பத்திரியில் இருந்து கொண்டுவரப்படஇருந்த ஆந்திர மாநில எம்.பியான அமர்நாத் ரெட்டி, திடீரென்று உயிரிழந்தார்.

எட்டு இந்திரா காங்கிரஸ் எம். பிக்கள் சக்கர நாற்காலியில் வந்து வாக்களித்தனர்.

முதலில்நாடாளுமன்ற சபாநாயகர் பல்ராம் ஜக்கர் வாக்களித்தார். பின்னர் பிரதமர் வாக்களித்தார்.

காங்கிரஸ் (ஐ) கட்சியின் வாக்குப் பலத்திலும் பார்க்க கூடுதலான வாக்குகளினால் திரு. வெங்கட்ராமன் வெற்றிபெறுவார் என்று பிரதமர் காந்தி செய்தியாளர்களிடம் நம்பிக்கை வெளியிட்டார்.

பதினொரு பாரதீய ஜனதா எம். பிக்களும் ஒரு ஜனதா எம்.பியும் நேற்று வாக்களிக்கவில்லை.

### தமிழ்நாட்டில்

தமிழ்நாட்டில் 223 சட்டசபை எம்.எல் ஏக்கள் வாக்களித்தனர். பதவி விலக்கப்பட்ட 10 திமுக எம். எல். ஏக்கள் வாக்களிக்க அனுமதிக்கப்படவில்லை. வில்லிவாக்கம் எம்.எல்.ஏயான திரு. வி. பி. சிந்தன் காலமானதால் ஒரு வாக்குப் பதிவாகவில்லை.

தமிழ்நாடு சட்டசபையில் மொத்தம் 234 எம். எல். ஏக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தான் வாக்குச்சீட்டில் ஆறு கோரிக்கைகளை எழுதி, வாக்குப்பெட்டியில் போட்டதாக வாக்களித்த சுயேச்சை எம். எல்.ஏ. பாலச்சந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

முன் அனுமதிபெற்ற 8 தமிழ்நாடு எம்.பிக்களும் சென்னையில் வாக்களித்தனர்.

சுகயீனம் அடைந்த பின்னர் முதல் தடவையாக நேற்று முதலமைச்சர் இராமச்சந்திரன் வாக்களிப்பதற்காக சட்டசபைக்கு வந்து இருந்தார்.

வாக்குகள் எண்ணப்படுவது வியாழன் காலை ஆரம்பமாகும். மாலையில் முடிவுகள் வெளியிடப்படும். (இ-எ)

# எட்டு வருடங். ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மானார்.

இன்பம், செல்வம் இருவரது மரணங்கள் குறித்தும் இந்துரராஜாவின் மரணம் குறித்தும் நடைபெற்ற மரண விசாரணைகளின்முடிவில் கொலைகள் என்றே தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

மூன்று பேர்களினதும் உடல்களிலும் காணப்பட்ட காயங்கள் படுகொலை செய்யப்படுமுன் சித்திரவதை செய்யப்பட்டதை உறுதிப்படுத்தின.

அதே இரவில் சிவில் உடை தரித்தவர்களால் கடத்திச் செல்லப்பட்ட இராஜேஸ்வரன், பரமேஸ்வரன் சகோதரர்களுக்கு என்னநேர்ந்தது என்பதுபற்றி சட்டரீதியாக உறுதி செய்யப்படவில்லை. அவர்களது பெயர்களும் ''காணமல் போனோ''ர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டியதாயிற்று.

ஆயின் இறந்தவர்கள் போக அன்றைய இரவில் சிவில்உடை தரித்தவர்களால் கைதுசெய்யப்பட்டவர்களில் உடுவிலை சேர்ந்த ஜெயேந்திரனும் கொக்குவில் மேற்கைச் சேர்ந்த ஐம்பது வயதினரான மதியாபரணமும் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

இவர்களுள் ஜெயேந்திரன் அளித்திருந்த வாக்குமூலம் இராஜேஸ்வரன், பரமேஸ்வரன் சகோதரர்கள் இருவரும் சாவகச்சேரி பொலீஸ் நிலையத்திலேயே மரணமடைந்ததை வெளிப்படுத்திற்று.

1979 வரவு செலவு திட்டகுழு நிலை விவாதத்தின் போது அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் திரு.அ. அமிர்தலிங்கமும் மரணங்கள் குறித்து நீதிவிசாரணை நடைபெற வேண்டும் என வலியுறுத்தியிருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவரது வேண்டுகோளின் பேரில் சம்பந்தப்பட்ட மரணங்கள் குறித்து விசாரிப்பதற்காக தற்போதைய தேசிய பாதுகாப்பு அமைச்சரான திரு. லலித் அத்துலத்முதலிதலைமையில்தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரத்தையும் உள்ளடக்கியதாகஒரு நாடாளுமன்றத் தெரிவுக் குழு நியமிக்கப்பட்டது. மேற்படி குழு யாழ்ப்பாணத்துக்கும் நேரில் வந்து விசாரணைகளை நடத்தியது.

ஆயினும் சம்பந்தப்பட்ட மரணங்கள் குறித்து மேலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே அந்த அறிக்கை வழங்கிய சிபார்சாகும்.

1971இல் இடம்பெற்ற காலி அழகு ராணி பிரேமாவதி மன்னம்பெரியின் மர்ம மரணம் துப்புத் துலக்கப்பட்டு கொலையாளிகள் தண்டிக்கப்பட்டனர்.

ஆனால் 1979 ஜுலை 14இல் கொலையுண்ட தமிழ் இளைஞர்களது மரணங்கள் இன்னமும் துப்புத் துலக்கப்படாமலும் கொலைஞர்கள் நீதிமன்றின் முன் நிறுத்தப்படாமலும் தப்பித்துக் கொண்டுள்ளனர்.

சிங்களவருக்கு ஒரு நீதி தமிழருக்கு ஒருநீதிஎன்ற கோட்பாடு அப்போதிருந்தே அமுல் நடத்தப்பட்டு வருகிறது.

## வித்தாரம்---

விசை இராஜினுமாச் செய்தவர்; இல்லை இல்லை செய்விக்கப் பட்டவர்!

எங்கையும் எய்தவன் இருக்க அம்பை நோகிற குற்றங் காண்கிற பழக்கம் தானே. ஆனால் லெப்டினட் கேர்ணல் நோர்த் பலிக்கடாவாகிவிட்டபோதிலும், ஜனதிபதி தேர்தலுக்கு நிக்கிற அளவுக்குப் பிரபல்யம் அடைஞ்சுவிட்டார்.

ஸ்ரீலங்கா நாட்டு ஜெனரல்மாருக்கு உதைக் கேள்விப்பட்டதும் நப்பாசை வரலாம்...!

# ரூ. 22 ஆயிரம் பெறுமதியான மாடுகள்--கன்றுகள் சுட்டுக் கொல்லப்பட்டன

## உ. அ. அதிபரிடம் முறையீடு

காங்கேசன்துறை, ஜுலை 14
இராணுவ நடவடிக்கையின்போது தமது வீட்டில் நின்ற 22 ஆயிரம் ரூபா பெறுமதியான மாடுகளும், கன்றுகளும் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டன என்று குப்பிளானைச் சேர்ந்த மாடு வியாபாரி க. அருளம்பலம் உடுவில் உதவி அரசாங்க அதிபரிடம் முறையிட்டுள்ளார்.

தமது வீட்டில் நின்ற 3 மாடுகளும், 4 கன்றுகளும், கோழிகளும் இவ்வாறு படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுக் கிடந்தன என்று அவர் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

குப்பிளானைச் சேர்ந்த இ. சிவலிங்கம் என்பவர் உதவி அரச அதிபருக்கு செய்துள்ள முறைப்பாட்டில் தமது பசுமாடு ஒன்றும்' கோழிகளும், மின் உபகரணங்கள், மணிக்கூடுகள், அரிசி மற்றும், உணவுப்பொருள்களும் இராணுவத்தால் கொள்ளையடிக்கப்பட்டன என்று தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் 7680 ரூபா தமக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (இ-68)

## பிரார்த்தனை----

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

திற்காக நான் பணிபுரிகின்றேன்.

இந்திய நடவடிக்கைக்கு எதிராக பிரதமர் ஸ்ரீலங்காவை பாதுகாக்க முயல்கின்றார். தான் பிரதிநிதித்துவம் வகிக்கும் இலட்சியத்துக்காக பிரதமர் அப்படிச் செய்கிறார்.

நான் எதைப் பிரதிநிதித்துவம் செய்கின்றேனோ அதன் தலைவர் என்ற முறையில் நான் செயல்படுகின்றேன்.

மற்றவை எமக்கு பொருத்தமானவை அல்ல. அவை எமது முடிவுக்கு தொந்தரவாக இருக்காது.

எமது சமூகத்தின் உரிமைகள் தான் எமக்கு முக்கியமானவை. அடிப்படை நோக்கமே எம் மக்களின் உரிமைகளைப் பெறுவதே.

கேள்வி: இந்த அரசில் நீங்களும் ஓர் அமைச்சராக இருக்கின்றீர்கள். ஆகவே உங்கள் அக்கறை உங்களுடைய சமூகத்துடன் மட்டும் நிற்க முடியாது என்றும் சொல்லலாம் அல்லவா! உங்களின் சமூகத்தின் நலனுக்கும் நாட்டின் நலனுக்கும் இணக்கமான முறையில் உங்கள் நடவடிக்கைகள் அமைய வேண்டும் அல்லவா?

தொண்டா: திருப்தி அற்ற அடக்கு முறைக்காளான சமூகம் ஒன்று மலைநாட்டில் இருக்கும் போது எப்படி நாம் அரசுக்கு உதவமுடியும் என்று நான் கேட்கின்றேன்.

நாட்டின் நலன் கருதித்தான் மலைநாட்டுர தமிழர் பிரச்சினை தீ. உதவ வேண்டியுள்ளது இதை அனைவரும் மெச்ச வேண்டும்.

(வளரும்)

## நாடு திரும்பினர்

லண்டன் சென்று சைவ தமிழ் பிரசார நடவடிக்கையை மேற்கொண்ட சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நாடு திரும்பினார்.

லண்டன் விம்பிள்டன் பிள்ளையார் கோவில், லண்டன் உயர்வாசற் குன்று முருகன் கோவில், ஞானனந்த சமாசம், தமிழ் சங்கம் உட்பட பல்வேறு ஆலயங்களிலும், சமய நிறுவனங்களிலும் இவர் சைவ தமிழ் சொற்பொழிவுகளை ஆற்றி இருந்தார். (இ-68)

## இந்தியா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டில் இருந்தே இந்த அகதிகள் கனடா சென்றதாக ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்து இருக்கின்றது.

இதற்கிடையில் இன்னொரு படகில் சுமார் 180 அகதிகள் கனடா நோக்கிச்சென்று கொண்டிருப்பதாகத் தகவல் கிடைத்திருப்பதாக பி. பி. சி. வானொலி நேற்று இரவு அறிவித்தது.

## வவுனியாவில் - - -

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

செல்கின்றார்.

இருவரும் அண்மையில் வடமராட்சிக்கு வந்து நிலைமையைப்பார்வையிட்டுச் சென்றனர் என்பது தெரிந்ததே.

[illegible] தலைவரும் ஆவார்.

# மாவிட்டபுரம் பகுதியில் வேலிகளுக்கு தீவைப்பு

காங்கேசன்துறை, ஜுலை 14
மாவிட்டபுரம் பகுதியில் ஞாயிறு இரவு வேலிகளை தீயிட்டுக் கொளுத்துவதில் இராணுவம் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

மாவிட்டபுரம் அரசடி வீதி சங்கக் கடைக்குப் பின்புறம் வீட்டுப் பொருள்களை எடுப்பதற்காக லான்ட்மாஸ்டரில் சிலர் சென்றனர். இவர்களை நோக்கி இராணுவம் சுடவே இவர்கள் தப்பியோடினர்.

லான்ட்மாஸ்டரை இராணுவம் எடுத்துச் சென்றது.

இதன்பின் மேற்படி லான்ட்மாஸ்டர் வந்த பகுதியில் ரயர்களைப் போட்டு வேலிகளைத் தீயிட்டுக் கொளுத்துவதில் இராணுவத்தினர் ஈடுபட்டனர்.

நெல்லியடி சம்பவத்தை அடுத்து மாவிட்டபுரம், விமன்காமம் பகுதிகளில் இராணுவத்தினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது,

நவீன ஆயுதங்களுடன் அங்கு இராணுவம் குவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (இ-68)

## மருத்துவபீட மாணவர் விரிவுரைகள்

யாழ்ப்பாணம், ஜுலை 14
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் இறுதி யாண்டு மருத்துவபீட மாணவர்களுக்கான விரிவுரைகள் இம்மாதம் 20ஆம் திகதி ஆரம்பமாகும்.

இப்படி மருத்துவ பீடாதிபதி அறிவித்திருக்கின்றார். (இ-எ)

## அச்சுவேலி பகுதியில் ஷெல் தாக்குதல்

பலாலி, ஜுலை 14
ஞாயிற்றுக்கிழமை இரவு அச்சுவேலி, பத்தமேனிப்பகுதியை நோக்கி மூன்று தடவைகள் விட்டு விட்டு 20க்கும் மேற்பட்ட ஷெல்கள் ஏவப்பட்டன.

ஊரியான், வல்லைச் சந்தி, வல்லைவெளி, பத்தமேனி, வண்ணாகிராய்ப் பகுதிகளை நோக்கி இரவு 8மணிக்கு ஒருமுறையும், 11.30 மணிக்கு மறு தடவையுமாக ஷெல்கள் ஏவப்பட்டன.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து அச்சுவேலிப் பகுதிப் பாடசாலைகள் நேற்று இயங்கவில்லை.

[illegible] இடம்பெயர்ந்து வெளியேறிக்கொண்டிருந்தனர். (இ-119)

## ஷெல் தாக்கி - - -

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

ஷெல் தாக்குண்டு சேதமடைந்த வார்ட்டுக்கள், கட்டடங்களைத் திருத்துமாறு இப்போது உத்தரவிடப்பட்டிருப்பதால், அதனை மூடும் முடிவை அரசு கைவிட்டு விட்டதாக நம்பப்படுகிறது.

அலெஸ் விசாரணைக் கமிஷன் முன் சாட்சியம் அளிக்கச் சென்றிருந்த யாழ் ஆஸ்பத்திரிப்பணிப்பாளர் டாக்டர் நச்சினார்க்கினியனிடம் ஷெல் தாக்குதலினால் சேதமடைந்த வார்ட்டுகள், கட்டடங்களைத் திருத்துமாறு தகவல் தெரிவிக்கப்பட்டது.

டாக்டர் நச்சினார்க்கினியன் அலெக்ஸ் விசாரணைக் கமிஷன் முன்னிலையில் இம்மாதம் ஒன்பதாம் திகதி மூன்று மணித்தியாலங்கள் இரகசியமாகச் சாட்சியமளித்திருந்தார். (அ-)

## பாதிக்கப்பட்ட பல்கலை மாணவர் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜுலை14
வடமராட்சி, வலிகாமம் கிழக்கு, வலிகாமம் மேற்குப், பகுதிகளில் பாதிக்கப்பட்டு ஏற்கனவே வழங்கப்பட்ட நிதியைப் பெறத்தவறிய பல்கலைக்கழக மாணவர்கள் தமது விண்ணப்பத்தை அகதிகள் புனர்வாழ்வு அமையத்திடம் இருந்து பெற்று நாளை 15ஆம் திகதி புதன் கிழமைக்கு முன்னர் பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு யாழ் பல்கலைக் கழக அகதிகள் புனர்வாழ்வு அமையம் கேட்டுக்கொள்கிறது(இ-1 61

## இடைக்காட்டில் வீடுகள் எரிப்பு

பலாலி, ஜுலை 14
இடைக்காட்டில் இராணுவத்தினரால் வீடுகள் பல எரிக்கப்படுகின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுதலைப் புலிகளால் வளலாயில் வைக்கப்பட்ட சண்ணிவெடியினால் டிரக் ஒன்று தூக்கி வீசப்பட்டு ஆறு சிப்பாய்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே இவ் வீடெரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

ஞாயிற்றுக் கிழமை இரவு தொடக்கம் நேற்றுக் காலைவரை வீடுகள் எரிந்துகொண்டிருந்தன. (இ-119

## ● அந்த வதந்தியில் உண்மை இல்லை

வடமராட்சி, ஜுலை 14
தென்மராட்சிப் பகுதியில் நேற்று வேகமாகப் பரவிவந்த வதந்தியை தமிழீழ விடுதலைப் புலிகள் மறுத்தனர்.

வடமராட்சிப் பகுதியில் இருந்து விடுதலைப் புலிகள் வாபஸ் பெற்றுவிட்டனர் என்பதே இந்த வதந்தி ஆகும்.

இதுகுறித்து விடுதலைப் புலிகள் பிரமுகர் ஒருவர் கருத்து வெளியிடுகையில், 'இது வெறும் வதந்தியே. இதில் உண்மையே இல்லை. மக்கள் அஞ்ச வேண்டியது இல்லை'— என்று தெரிவித்தார்.

(இ-எ-160)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 14-07-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Tuesday July 14, 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org